# சிந்திக்கல்லூரி
## தமிழ்த்துறை
## இணையவழித் திறனறித்தேர்வு அறிக்கை

சிந்திக்கல்லூரி முதல்வர் முனைவர் கே.சத்யநாராயணா அவர்களின் அனுமதி மற்றும் வாழ்த்துகளுடனும் தமிழ்த்துறைத் தலைவர் முனைவர் த.பிரகலாதன் அவர்களின் வழிகாட்டுதலுடனும் தமிழ்த்துறை சார்பில் மூன்று இணையவழித் திறனறித் தேர்வுகள் நடத்தபெற்றன. அதன் விவரம் பின்வருமாறு

- **திறனறித் தேர்வு-1- அழைப்பிதழ்**




**'தமிழர் பண்பாடு'** எனும் பொருண்மையில் திறனறித் தேர்வு-1 (https://forms.gle/ezvARkLReAF7Pagb7) **03.06.2020 முதல் 05.06.2020 வரை** நடைப்பெற்றது. இத்தேர்வினைச் சிந்திக்கல்லூரி தமிழ்த்துறை

உதவிப்பேராசிரியர் **முனைவர் பெ.சுபா** ஒருங்கிணைத்தார். இதில் **662** பேர் பங்கு பெற்றனர். இத்திறனறித் தேர்வில் 50 சதவீதத்திற்கு மேல் **445** பேர் மதிப்பெண் பெற்று தேர்வில் வெற்றி பெற்றிருந்தனர். அதன் அடிப்படையில் நாளுக்கு 100 தானியங்கி சான்றிதழ் வீதம் அனைவருக்கும் அவர்களின் மின்னஞ்சலுக்குச் சான்றிதழ் எண்ணோடு அனுப்பி வைக்கப்பட்டது. இத்தேர்வில் 25 வினாக்கள் கேட்கப்பட்டு, 100 மதிப்பெண் அளவுக்கோலாகக் கொண்டு இத்திறனறித் தேர்வு நடத்தப்பட்டது. வினாக்களின் இறுதியில் இத்தேர்வுக் குறித்து ‘கருத்து’ கேட்கப்பட்டிருந்தது. அதன்வழியாகப் பலர் தங்கள் கருத்துகளையும் பதிவு செய்திருந்தனர். **662** பேர் வழங்கிய கருத்துக்களில் தேர்வுக்குறித்தும் கல்லூரி நிர்வாகம் பற்றியும் கூறியவற்றில் சில பதிவுக்கு...

**கருத்துக்கள்**

1. நன்றி சிந்தி கல்வி துறை .. இது போன்ற அமைப்புகள் வழங்கிய சிந்தி கல்வி துறைக்கு மிக்க நன்றிகள்.
2. ஊரடங்கு காலத்திலும் பயனுள்ள வகையில் திறனறிதல் தேர்வு நடத்தி தம் கல்விப்பணியில் தொய்வடையாமல் தமிழ்மொழி காக்கும் சிந்திக்கல்லூரியை வணங்கி போற்றுகின்றேன்.
3. படித்தவைகளை நினைவில் வைத்துக்கொள்ள தூண்டுபவைகளாக இருக்கின்றது.நன்றி...
4. அனைத்து வினாக்களும் யோசித்து பதில் கூறும் வகையில் புதுமையாக இருந்தன
5. தேசிய திறனறித் தேர்வுக்கு இணையான வினாக்கள் நன்றி
6. அருமை. தமிழர்களின் வரலாற்றை உலகறிய செய்துள்ளது சிறப்பு
7. புதிய செய்திகளைக் கூறும் வினாக்கள் இடம்பெற்றுள்ளன.
8. கல்லூரியை அறிய மிகச் சிறந்த தமிழ் ஆன்லைன் தேர்வு மற்றும் தனித்துவமான கூகிள் படிவ அமைப்பு
9. விடுமுறை நாட்களில் புத்தகத்தை எடுத்து எதையும் படிக்க மனமில்லை...... ஆனால் இதனை போன்ற தேர்வுகளின் மூலமாக எனக்கு தெரியாத சில விஷயங்களை தெரிந்துக்

கொள்ள முடிகிறது..... தேர்வை நடத்தும் என் கல்லூரிக்கும் என் ஆசிரியருக்கும் என் மனமார்ந்த நன்றி

10. மேலும் அபுதாபியிலிருந்து தொலைப்பேசி மூலமாக வாழ்த்துக்களும் கூறினர்.

**மின் சான்றிதழ் (சான்றிதழ் எண்) வழங்கப்பட்டது**




**பங்குப்பெற்ற பேராசிரியர் சான்றிதழ்**




**பங்குப்பெற்ற மாணவன் சான்றிதழ்**

- **திறனறித் தேர்வு-2- அழைப்பிதழ்**

**சிந்திக் கல்லூரி**

சென்னைப் பல்கலைக்கழகத்துடன் நிரந்தர இணைப்புப்பெற்றது

146, பூந்தமல்லி நெடுஞ்சாலை, நூம்பல், சென்னை-600077

தொலைப்பேசி: 044 - 26800199 வலைத்தளம்: www.sindhicollege.in

CELEBRATING 29 YEARS OF EXCELLENCE

வணக்கம்!

தமிழ்த்துறை,
சிந்திக்கல்லூரி, சென்னை - 77. சார்பில் கல்லூரிப் பேராசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் பயன்படும் வகையில் 07.06.2020 முதல் 08.06.2020 வரை 'நாட்டுப்புறவியல்' எனும் பொருண்மையில் இணையவழித் தமிழ்த்திறனறித் தேர்வு நடைபெற உள்ளது. நாள் ஒன்றுக்கு, முதலில் பங்குபெறும் 100 பேர் மட்டுமே இத்தேர்வை எழுத இயலும். தேர்வில் 60சதவீதம் மதிப்பெண் பெற்றவர்களுக்கு மட்டும் தானியங்கு அடிப்படையில் சான்றிதழ் அவரவர் மின்னஞ்சலுக்கு அனுப்பி வைக்கப்படும். எனவே தங்கள் விவரங்களைச் சரியாகப் பதிவு செய்யவும். இத்தேர்விற்கோ சான்றிதழுக்கோ கட்டணமில்லை. ஒருவர் ஒரு முறை மட்டுமே தேர்வில் கலந்து கொள்ள முடியும். கலந்து கொண்டு பயன்பெறுமாறு அன்புடன் அழைக்கிறோம்.

இங்ஙனம்

முனைவர் கே.சத்யநாராயணா கல்லூரி முதல்வர், சிந்திக்கல்லூரி.

முனைவர் த.பிரகலாதன் தமிழ்த்துறைத் தலைவர், சிந்திக்கல்லூரி.

ஒருங்கிணைப்பாளர்கள்
முனைவர் டே. மேரி ஆரோக்கிய கிளீட்டஸ் கலா,
முனைவர் சி.பு. இந்துஜா,
முனைவர் க. வாணிஜோதி,
இணைப்பேராசிரியர்கள், தமிழ்த்துறை, சிந்திக்கல்லூரி

தேர்வைக் கீழ்க்காணும் இணைப்பைப் பயன்படுத்தி எழுதலாம்.
https://forms.gle/Cn8KYghrkEgwSvkGA

தொடர்புக்கு,
tamil.sindhicollege@gmail.com

நன்றி

**‘நாட்டுப்புறவியல்’** எனும் பொருண்மையில் திறனறித் தேர்வு-2 (https://forms.gle/Cn8KYghrkEgwSvkGA) **07.06.2020 முதல் 08.06.2020 வரை** நடைப்பெற்றது. இத்தேர்வினைச் சிந்திக்கல்லூரி தமிழ்த்துறை இலக்கியப் பேரவை சார்பாக இணைப்பேராசிரியர்கள் **முனைவர் டே.மேரி ஆரோக்கிய கிளீட்டஸ் கலா, முனைவர் சி.பு. இந்துஜா, முனைவர் க.வாணிஜோதி** ஆகியோர் ஒருங்கிணைத்தனர். இத்தேர்வு காலை 9 மணி முதல் மாலை 6 மணி வரை ஒரு நாளுக்கு 100 பேர் கலந்துகொள்ளும்


வகையில் இரண்டு நாள் திறனறித் தேர்வு நடத்தப்பட்டது. அதில் 212 பேர் பங்கு பெற்றார்கள். அவர்கள் அனைவருக்கும் தானியங்கி வழியாக மின் சான்றிதழ், பங்கேற்பாளரின் மின்னஞ்சலுக்கு அனுப்பப்பட்டது தெரிவித்துக் கொள்கிறோம்.

**மின் சான்றிதழ் வழங்கப்பட்டது**






- திறனறித் தேர்வு-3- அழைப்பிதழ்




**'தமிழ் இலக்கணம் அறிவோம்'** எனும் பொருண்மையில் திறனறித் தேர்வு-3 ([https://forms.gle/qXTp1Yg1cn7JWTRJ6](https://forms.gle/qXTp1Yg1cn7JWTRJ6)) **10.06.2020 முதல் 12.06.2020 வரை** நடைப்பெற்றது. இத்தேர்வினைச் சிந்திக்கல்லூரி தமிழ்த்துறை இணைப்பேராசிரியர் **முனைவர் நா.சுப்புலட்சுமி** அவர்களின் ஒருங்கிணைப்பில் மற்றுமுள்ள அனைத்து தமிழ்த்துறைப் பேராசிரியர்களின் இணை ஒருங்கிணைப்பில் நடத்தப்பட்டது. இதில் **330** பேர் பங்கேற்பாளர்களாகக் கலந்துகொண்டு அனைவரும் மின்சான்றிதழ் பெற்றனர் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

மின் சான்றிதழ் வழங்கப்பட்டது







இவ்வாறு 03.06.2020 முதல் 12.06.2020 வரை மூன்று திறனறித்தேர்வுகள் நடத்தப்பட்டன என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறோம்.